*6*

# பரிசுத்த ஆவியானவரின் வரங்கள்

*"வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு. எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப் பட்டிருக்கிறது" (1 கொரி. 12:4-7).*

பரிசுத்த ஆவியானவரால் அருளப்பட்ட வரங்களை, பரிசுத்த ஆவியானவரின் "வரத்துடன்" குழப்பிக் கொள்ளக்கூடாது. பரிசுத்த ஆவி யானவரின் "வரம்" (Gk.: *dorea*) என்றால் அது/அவர், பரிசுத்த ஆவியான வராகவே இருக்கின்றார் (அப். 10:44, 45; 11:17), ஆனால் "வரங்கள்" (Gk.: *chrisma*) என்பவை பரிசுத்த ஆவியானவரால் தரப்பட்ட தெய்வீகத்துவ அளிப்பான இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமைகளாயிருந்தன (ரோமர் 1:11; 12:6; 1 கொரி. 1:7; 12:4, 9, 28, 30, 31; 1 தீமோ. 4:14; 2 தீமோ. 1:6). *Chrisma* என்பது இயல்பில் இயற்கைக்கு மேற்பட்டதாக இல்லாத வரங்களையும் (இது "தயவு" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; 2 கொரி. 1:11) குறிப்பிடக்கூடும் (ரோமர் 5:15, 16; 6:23; 11:29; 12:6-8; 1 பேது. 4:10, 11).

பவுல், "வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே" என்று கூறினார் (1 கொரி. 12:4). கொரிந்தியர்கள் மாறுபட்ட வரங்களைப் பெற்றிருந்தனர் என்பது அவர்கள் மாறுபட்ட ஆவிகளைக் கொண்டிருந் தனர் என்று அர்த்தப்படுத்தவில்லை என்பதே பவுலின் கருத்தாக இருந்தது. ஆவியானவரின் பல்வகைப்பட்ட வரங்கள், பிரிவினைக்குப் பதிலாக (1 கொரி. 1:10-12), "ஆவியின் ஒருமைப்பாட்டை" கொண்டுவந்திருக்க வேண்டும் (எபே. 4:3). பவுல், மனித உடலை, கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள அநேக உறுப்பினர்களுடன் ஒப்பிட்டதன் மூலம், ஒன்றாயிருத்தலின் சத்தியத்தை விவரித்தார் (1 கொரி. 12:12, 13).

## வரங்களின் பல்வகைத் தன்மை

பவுல், 1 கொரிந்தியர் 12ல் ஒன்பது வகையான வரங்களைப் பட்டியலிட்டார்: "ஞானத்தைப் போதிக்கும் வசனம்," "அறிவை

*உணர்த்தும் வசனம்," (வ. 8); "விசுவாசம்," "குணமாக்கும் வரங்கள்," (வ. 9); ''அற்புதங்களைச் செய்யும் சக்தி,'' ''தீர்க்கதரிசனம் உரைத்தல்,'' "ஆவிகளைப் பகுத்தறிதல்," "பற்பல பாஷைகளைப் பேசுதல்," "வியாக் கியானம் பண்ணுதல்" (வ. 10). கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்களில் எவரொருவரும் இந்த வரங்கள் எல்லாவற்றையும் கொண்டிருந்ததில்லை.* F.W. Grosheide *அவர்கள், ''பகிர்ந்து கொடுத்தல் என்ற ஒன்றே இதில் கருத்தாக உள்ளது, மற்றும் இது, எவரொருவரும் எல்லாவற்றையும் பெற்றிருக்கவில்லை என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது" என்று மிகச் சரியாகக் கவனித்துள்ளார்.*[1] *ஒருவேளை, அப்போஸ்தலர்கள் இந்த வரங்களில் ஒவ்வொன்றையும் பெற்றிருக்கலாம், ஆனால் வேறு எவரும் அவ்வாறு பெற்றிருந்ததில்லை.*

*கொரிந்து சபையில் இருந்த அற்புதவரங்கள் ஒரே ஆதாரமூலத்திலிருந்து வந்தன மற்றும் அவைகள் ஆவியானவருடைய சித்தத்தின்படி அருளப் பட்டன. இந்த உண்மையை வலியுறுத்துவதில் பவுல் மிகவும் கவனமாய் இருந்தார்: "இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்" (1 கொரி. 12:11). கோர்டன் ஃபீ அவர்கள், "தெய்வீகத்துவ நபர் ஒவ்வொருவருக்கும் 'ஒரே' என்ற வார்த்தை மீண்டும் மீண்டும் குறிப்பிடப்படுதல் என்பதே, ஒரே ஆவியானவர்/கர்த்தர்/தேவன் தம்மைப் பல்வகைப்பட்ட வரங்கள் மற்றும் ஊழியங்கள் மூலமாக வெளிப்படுத்துகின்றார் என்பதை வலியுறுத்து வதாகக் காணப்படுகிறது. இவ்விதமாக, தேவனுடைய ஒருமைப்பாடு, வரங்களில் ஒருமைத்துவத்தை மறைமுகமாய்க் குறிப்பிடுவதில்லை; மாறாக, ஒரே தேவன் தாமே அதன் [வரங்களின்] பல்வகைத்தன்மைக்குப் பொறுப்பு வாய்ந்தவராக இருக்கின்றார்" என்று விளக்கம் அளித்தார்.*[2]

*மேட்டிமையினிமித்தம் பொறாமை அல்லது பிரிவினை எழும்புவதற் குப் பதிலாக, வரங்களைக் கொண்டிருத்தலினால் ஒருமைப்பாடு விளைந்திருக்க வேண்டும். பல்வேறு வரங்களைப் பெற்றுக் கொண்ட வர்கள், அவற்றைத் தங்கள் சுயதகுதியினாலோ அல்லது திறமையினாலோ பெற்றுக்கொள்ளவில்லை, ஆனால் அந்த வரங்களை (ஆவியானவர் மூலமாகக்) கொடுத்திருந்த இயேசுவுக்கே எல்லா மகிமையும் கனமும் உரித்தானவை என்பதை உணர்ந்தறிந்திருக்க வேண்டும்.*

*கொரிந்துவில் இருந்த ஒவ்வொரு கிறிஸ்தவரும், எல்லா வரங்களையும் கொண்டிருப்பதற்கு மாறாக, தங்களுக்கே உரித்தான தனித்த வரத்தைக் கொண்டிருந்தார் என்ற உண்மையைப் பவுல் வலியுறுத்தினார்:*

> *எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர் களா? எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா? (1 கொரி. 12:29, 30).*

*இராபர்ட் பிரேட்செர் அவர்கள் சுட்டிக்காண்பித்தபடி, "... இந்த இரண்டு வசனங்கள் சாமர்த்தியமான ஏழு கேள்விகளைக் கொண்டுள்ளன, இவை*

*யாவையும் 'இல்லை' என்ற பதிலை எதிர்பார்ப்பவைகளாக உள்ளன."*[3] *அற்புத வரங்கள் என்பவை ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் ஒரே வகையான திறன்களைப் பொழியும் நோக்கத்திற்காகத் தரப்படவில்லை.*

## வரங்களின் நோக்கம்

*வரங்களைப் பெற்றுக்கொண்டவர்களின் தனிப்பட்ட பயன் பாட்டிற்கு அல்ல ஆனால் சபை முழுவதுமாகக் கட்டியெழுப்பப்பட்டு பயன்பெற வேண்டும் என்பதே வரங்களின் நோக்கமாக இருந்தது. கொரிந்தியர்கள் இந்த சத்தியத்தைக் காணாது விட்டுவிடாதிருப்பதைப் பவுல் நிச்சயப்படுத்திக் கொண்டார்.*

> *ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது (1 கொரி. 12:7).*
>
> [*இது ஆங்கில வேதாகமத்தில்* "But each one is given the manifestation of the Spirit for the Common good" *என்றுள்ளது.*]
>
> *... சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு, அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார் (1 கொரி. 12:25).*

*மற்ற ஒவ்வொரு வரத்தையும் போலவே, தீர்க்கதரிசன வரமும், சபைக்குப் பக்திவிருத்தியூட்டுதல் என்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது: "தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்தி விருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான் (1 கொரி. 14:3); "நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால், சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகத்தக்கதாக அவைகளில் தேறும்படி நாடுங்கள்" (1 கொரி. 14:12); "... சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக் கடவது" (1 கொரி. 14:26). "சகலமும்" என்ற சொற்றொடரானது, கிறிஸ்தவ சபைகூடிவருதலில் பாஷைகள் பேசுதலும் மற்றும் பிற வரங்கள் யாவையும் தனிப்பட்ட பக்திவிருத்திக்காக அல்ல ஆனால் சபையைக் கட்டியெழுப்பு வதற்காகவே பயன்படுத்தப்பட வேண்டும் என்று அர்த்தப்படுவதா யிருக்கும்.*

*ஃபிரெடெரிக் டேல் புரூனெர் அவர்கள் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:*

> *இந்த வரங்களைப் பவுல், சபையின் தலையாய கண்ணோக்கிலிருந்து பார்த்தார் மற்றும் இந்தக் கண்ணோட்டமானது எந்த ஒரு வரத்தையும் அதன் இருத்தலினால் மாத்திரம் மதிக்காமல், மற்றவர்கள் கட்டியெழுப்பப்படுவதற்கு அவர்களுடன் புரிந்துகொள்ளத்தக்க வகையில் அது செய்தித் தொடர்பு கொள்ளுவதைக் கொண்டு அதை மதிப்பிடுகிறது. சபைக்காகப் பயன்படுத்தப்படாத ஒரு வரம் தனிநபர்*

*ஒருவருக்குள் "இருந்ததாக" கூறக்கூடுவதே, பவுலின் சிந்தனையில் கேள்விக்குறியாக இருந்தது.[4]*

## வரங்களைப் பெற்றுக்கொண்டவர்கள்

*கிறிஸ்தவர்கள் ஏற்கனவே பரிபூரணத்துவத்தை அடைந்திருந்ததால் அல்ல, ஆனால் அவர்கள் ஆவிக்குரிய பக்குவத்தை அடைவதற்கு அவர்களுக்கு உதவுவதற்காவே ஆவிக்குரிய வரங்கள் அருளப்பட்டன. மேன்மையான ஆவிக்குரிய தன்மையின் ஆழத்தை அடைந்தவர்களுக்கல்ல, ஆனால் சமீபத்தில் மனம் மாறியவர்களுக்கே இந்த வரங்கள் அருளப் பட்டன (அப். 8:14-18; 19:6). கொரிந்து நகரில் இருந்த சபையானது வளருதல் தேவைப்பட்டிருந்த புதிய கிறிஸ்தவர்களைக் கொண்டிருந்தது.*

*புரூனெர் அவர்கள், ''ஆவிக்குரிய வரங்கள் (அல்லது பவுலின் சொல்விளக்கத்தைப் பயன்படுத்துவதென்றால், கிருபைகள்), தேர்ந்து கொள்ளப்பட்ட ஒரு சிலருடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படுவதில்லை, ஒருவேளை அவர்களின் ஆழமான அர்ப்பணிப்பு அல்லது ஆவியான வருடன் மிகவும் நெருங்கிய தன்மை என்பதன் காரணமாக அசாதாரண மான வெளிப்பாடுகளைக் காட்சிப்படுத்தக்கூடும் என்பதால் இவ்வாறு மட்டுப்படுத்தப்படாதிருக்கலாம்" என்று சுட்டிக்காண்பித்தார்.[5]*

*கொரிந்துவில் இருந்த சபை, ஆவிக்குரிய விசேஷித்த வரங்கள் என்பவை ஆவிக்குரிய மேன்மைத்துவத்திற்கு உறுதிப்பாடுகளாக இருந்ததில்லை என்பதற்கு சாட்சியாக உள்ளது. பவுலின் மதிப்பீட்டின்படியாக, கொரிந்து வில் இருந்த சபையானது ஆவிக்குரிய பக்குவத்தில் குறைவுபட்டிருந்தது. அந்தக் கிறிஸ்தவர்களைப் பற்றிப் பவுல் பின்வருமாறு எழுதினார்:*

> *மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர் களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று. நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக் கொடுத்தேன். இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை. பொறாமையும் வாக்கு வாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர் களல்லவா? (1 கொரி. 3:1-3).*

*பரிசுத்த ஆவியானவருக்குள் ஞானஸ்நானத்தின் மூலமாக, அப்போஸ் தலத்துவ அடையாளங்கள் என்ற வகையில் விசேஷித்த வல்லமைகள் அருளப்பட்டிருந்தன (2 கொரி. 12:12; அப். 1:8; 2:1-4ஐயும் காணவும்). தேவன், தாம் புறஜாதியாரை இரட்சிப்புக்கென்று ஏற்றுக் கொண்டதைக் காண்பிக்கவும் இந்த அடையாளங்களைப் பயன்படுத்தியிருந்தார் (அப். 10:44, 45; 11:15; 15:7-9). அப்போஸ்தலர்கள் தங்கள் கரங்களை வைத்தலின் மூலமாக, மற்றவர்களுக்கு விசேஷித்த வரங்களைப் பொழியும்படிக்கு அவர்களுக்கு ஆவியானவர் அருளப்பட்டார் (அப். 8:14-18; 19:5, 6; 2 தீமோ.*

1:6). பரிசுத்த ஆவியானவருக்குள் ஞானஸ்நானம் என்பதும் அப்போஸ்தலர்களின் கரங்களினால் ஆவியானவர் அருளப்படுதல் என்பதும் முற்றிலும் தனித்தனியான நிகழ்ச்சியாக இருந்தன.[6]

பவுல், 2 தீமோ. 1:6ல் தீமோத்தேயுவுக்கு உரைத்த கூற்றைச் சிலர், பரிசுத்த ஆவியானவரைக் கொடுக்கக் கூடியவர்களாய் இருந்தவர்கள் அப்போஸ்தலர்கள் மாத்திரமல்ல [வேறு சிலரும் கொடுத்தனர்] என்பதற்கு நிரூபணமாகப் பயன்படுத்துகின்றனர். தீமோத்தேயுமீது பவுல் தம் "கரங்களை வைத்ததின் மூலமாக" அவர் [தீமோத்தேயு] *chrisma*வாகிய ஒரு வரத்தைப் பெற்றிருந்தார் என்று பவுல் எழுதினார். இதற்கு முன்னதாக அவர் [பவுல்], தீமோத்தேயுவின்மீது, "மூப்பராகிய சங்கத்தார் ... கைகளை வைத்துபோது"அவர் ஒரு வரத்தைப் பெற்றிருந்தார் என்று எழுதியிருந்தார் (1 தீமோ. 4:14).

> பவுலின் கைகள் வைக்கப்பட்டபோது, தீமோத்தேயு அதன் "மூலமாக" அல்லது ''அதனால்'' (பெயரெச்ச விகுதியுடன் பயன்படுத்தப்படும்போது, ***மற்ற செயல்கள் என்ற முகமையின்*** மூலமாக என்று அர்த்தப்படுகிற கிரேக்க முன்னிடைச் சொல்லான *dia* என்ற) ஒரு வரத்தைப் பெற்றிருந்தார் (2 தீமோ. 1:6). இது மூப்பர்களின் கைகள் வைக்கப்படும்போது "அதனுடன்" (பெயரெச்ச விகுதியுடன் பயன்படுத்தப்படும்போது ''அத்துடன் இணைந்துள்ள'' என்று அர்த்தப்படும் *meta* என்ற கிரேக்க முன்னிடைச் சொல்) வரம் கொடுக்கப்பட்டது என்று பெரும்பாலும் அர்த்தப்படுவதாக உள்ளது (1 தீமோ. 4:14). நல்ல காரணத்திற்காக பவுல், தீமோத்தேயு இந்த வரத்தைப் பெற்றது எப்படி என்பதற்கு மாறுபட்ட இரண்டு முன்னிடைச் சொற்களைப் பயன்படுத்தினார் என்பது உறுதி. இயேசு, பவுலின்கரங்கள் என்ற ***முகமையின் மூலமாக*** மற்றும் மூப்பர்களின் கரங்களின் ***இணைவுடன்,*** தீமோத்தேயுவுக்கு ஒரு வரத்தைக் கொடுத்தார். அந்த வரம் கொடுக்கப்பட்டதற்குப் பவுலின் கரங்கள் ஒரு முகமையாகச் செயல்பட்டது, மற்றும் பவுல், மூப்பர்கள் ஆகியோரின் கரங்கள் வைக்கப்பட்டபோது தீமோத்தேயு அந்த வரத்தைப் பயன்படுத்த நியமிக்கப்பட்டார்.[7]

கைகளை வைக்குதல் என்பது பல்வேறு நோக்கங்களைக் கொண்டிருந்தது: (1) இன்னொருவருக்கு ஒரு ஆசீர்வாதத்தைச் சிறப்புற அளிப்பதற்கு (மத். 19:15), (2) குணமாக்குதலில் தொடும் வல்லமையை அளிப்பதற்கு (லூக். 4:40; 13:13), (3) பரிசுத்த ஆவியானவரின் வரத்தை அளிப்பதற்கு (அப். 8:14-18; 19:6; 2 தீமோ. 1:6), மற்றும் (4) விசேஷித்த பொறுப்புகள் அல்லது பணிநிலைகளுக்கு மக்களை நியமிப்பதற்கு (அப். 6:6; 13:3). இவற்றில் கடைசி இரண்டு நோக்கங்கள், தீமோத்தேயுவை சுவிசேஷத்துவ ஊழியம் செய்யும்படி தயார் செய்வதற்காக நடைபெற்றன. பவுலுடைய கரங்களின் "மூலமாக," தீமோத்தேயுவுக்கு ஒரு விசேஷித்த வரம் தரப்பட்டது (2 தீமோ. 1:6). அந்த வரத்தை செயல்படுத்துவதற்குத் தீமோத்தேயுவை நியமிக்க பவுலின் கரங்களுடன் மூப்பர்களும் தங்கள் கரங்களை வைத்தனர் (1 தீமோ. 4:14).

*குறிப்பிட்ட சில மக்களே ஆவிக்குரிய வரங்களைக் கொண்டிருந்தனர்: (1) அப்போஸ்தலர்கள் மற்றும் புறஜாதியாரிலிருந்து முதன்முதலில் கிறிஸ்தவரானவர்கள் தவிர, அப்போஸ்தலர்களின் கரங்களை வைத்ததன் மூலம் ஆவிக்குரிய வரங்கள் அருளப்பட்டன (அப். 19:6). (2) அப்போஸ் தலர்கள் மூலமாகவே இந்த வரங்கள் அருளப்பட்டதால், ஒரு வரத்தை (Gk.: chrisma; ரோமர் 1:11) அருளுவதற்கு அப்போஸ்தலர் யாரேனும் அங்கு இருக்க வேண்டியிருந்தது. (3) ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்ட வரத்தின் இயல்பானது, அந்த வரத்தைப் பெற்றுக் கொண்டவரின் விருப்பத்தையல்ல, ஆனால் பரிசுத்த ஆவியானவரின் சித்தத்தையே சார்ந்திருந்தது (1 கொரி. 12:11). (4) சபைக்குள் வரங்கள் இருத்தல் என்பது, அந்த சபைக்கு அப்போஸ்தலர் வந்திருந்தார் என்பதைக் குறிப்பதாக இருந்தது (1 கொரி. 9:1, 2).*

*உதாரணமாக, கொரிந்து நகரில் இருந்த சபையார், "யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய்" இருந்தனர் (1 கொரி. 1:7). இது, அப்போஸ்தலரான பவுல் கொரிந்து நகரில் இருந்தார் என்ற காரணத்தினால் உண்மையாக இருந்தது. பவுல் கொரிந்து நகரில் இருந்தபோது செய்திருந்தது போலவே (2 கொரி. 12:12), அவர்களுக்கு, மற்ற அப்போஸ்தலர்களும் தங்கள் அப்போஸ்தலத்துவத்தின் அடையாளமாக வரங்களைக் கொடுத்திருக்கக்கூடும்; இருப்பினும், மற்றவர்கள் அங்கு இருந்ததில்லை. இந்த உண்மையின் அடிப்படையில், பவுல் தாம் ஒரு அப்போஸ்தலர்தாம் என்பதற்குக் கொரிந்து சபையை ஆதாரமாகப் பயன்படுத்தி இருக்கக்கூடும்:*

> *நான் அப்போஸ்தலனல்லவா? நான் சுயாதீனனல்லவா? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நான் தரிசிக்கவில்லையா? கர்த்தருக்குள் நீங்கள் என் கிரியையாயிருக்கிறீர்களல்லவா? நான் மற்றவர்களுக்கு அப்போஸ்தலனாயிராவிட்டாலும், உங்களுக் கல்லவோ அப்போஸ்தலனாயிருக்கிறேன். கர்த்தருக்குள் நீங்கள் என் அப்போஸ்தல ஊழியத்திற்கு முத்திரையாயிருக்கிறீர்களே (1 கொரி. 9:1, 2).*

*கொரிந்துவில் இருந்த சபையார் எந்த வரத்திலும் குறைவுபடாதவர் களாய், ஆனால் அப்போஸ்தலர்கள் கொடுக்கக் கூடிய வரங்களின் முழு அலகையும் கொண்டிருந்ததினால் பவுலின் அப்போஸ்தலத்துவத்திற்கு முத்திரையாக இருந்தனர். பவுலின் அப்போஸ்தலத்துவம் பற்றி எவரேனும் கேள்வி யெழுப்பியிருந்தால், அவர் கொரிந்து சபையைச் சுட்டிக் காண்பித்து, "அவர்கள் எனது அப்போஸ்தலத்துவத்தின் முத்திரையாக உள்ளனர்" என்று கூறியிருக்க முடியும். அப்போஸ்தலர்கள் மாத்திரமே வரங்களைக் கொடுக்க முடியும் என்பதால் - மற்றும் வேறு எந்த அப்போஸ்தலரும் கொரிந்து நகரில் இருந்ததில்லை என்பதால் - கொரிந்தியர்கள் வரங்களை உடையவர்களாய் இருந்தது என்பது, பவுல் ஒரு அப்போஸ்தலராயிருந்தார் என்பதற்குச் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட ஆதாரமாக இருந்தது. இந்த சத்தியத்தின் அடிப்படையில் நாம், அப்போஸ்தலர்கள் மாத்திரமே வரங்களைக் கொடுக்க முடிந்தது என்று முடிவு செய்ய இயலும்; ஏனெனில்*

*அப்போஸ்தலரல்லாதவர்கள் வரங்களைக் கொடுக்க முடிந் திருந்தது என்றால், கொரிந்து சபையானது பவுலின் அப்போஸ்தலத் துவத்திற்கு முத்திரையாக அவரால் பயன்படுத்தப்பட்டிருக்காது.*

## *வரங்களின் இயல்பு*

*ஒன்பது வரங்களில் ஒவ்வொன்றுமே பச்சிளம் குழந்தையின் இயல்பில் இருந்த கொரிந்து சபைக்குப் பயனுள்ளதாக இருந்தது. அந்த வேளையில், தேவனுடைய வெளிப்படுத்துதல் முற்றுப் பெற்றிருக்கவில்லை; அவரது வசனம் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கு உறுதிப்படுத்துதல் அவசியமாயிருந்தது. ஆகையால், விசுவாசமுள்ள சமூகத்திற்குள் வரங்கள் என்பவை, புதிய கிறிஸ்தவர்களுக்கு அறிவுறுத்துதலுக்கும் அவர்களைப் பெலப்படுத்துவதற்கும் பயன்மிக்கவைகளாக இருந்தன.*

*"ஞானத்தைப் போதிக்கும் வசனம்" (1 கொரி. 12:8) என்ற வரம் ஆவியானவர் மூலமாக (1 கொரி. 12:11) தெய்வீகத்துவமாய் அருளப் பட்டதாக இருந்தது, இது மனித முயற்சி மற்றும் திறமையின் மூலமாக வருவதில் இருந்து மாறுபட்டதாக உள்ளது. இந்த வித்தியாசத்தைப் பவுல் வலியுறுத்தினார்:*

> *உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது.*
>
> *அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம். இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்துபோகிறவர் களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம் (1 கொரி. 2:4-7).*

> *... அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி ... (1 கொரி. 2:13).*

*பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்த "ஞானத்தை போதிக்கும் வசனம்" என்பது மனித ஞானமாயிராமல், ஆவியானவரால் அளிக்கப்பட்ட தேவஞானமாக இருந்தது.*

*"அறிவை உணர்த்தும் வசனம்" (1 கொரி. 12:8) என்பது ஞானத்தைப் போலவே, தெய்வீகத்துவத்தினால் அருளப்பட்ட அறிவாக* (Gk.: *gnosis*) *இருந்தது.*[8] *இந்த அறிவானது ஞானத்துடன் இணைந்து கிறிஸ்துவுக்குள் மறைந்திருந்தது (கொலோ. 2:2, 3) மற்றும் இது ஆவியானவரால் வெளிப் படுத்தப்படும் வரைக்கும் இரகசியமாக நிலைத்திருந்தது (எபே. 3:3-5). மனித தர்க்கம் அல்லது மனித அனுபவத்தின் மூலம் அடையக்கூடிய இன்னொரு வகையான அறிவு* (Gk.: *sunioda; அப். 5:2) வேதாகமத்தில்*

குறிப்பிடப்பட்டுள்ளது. மனித அறிவுக்குப் பதிலாக, "அறிவை உணர்த்தும் வசனம்" என்பது வெளிப்படுத்துதல் மூலமாக மாத்திரம் அறியப்படக்கூடிய, ஞானத்துடன் இணைந்த "தேவனுடைய அறிவாக" உள்ளது (ரோமர் 11:33).

ஆவியானவரால் அருளப்பட்ட "விசுவாசம்" என்பது (1 கொரி. 12:9) தேவனுடைய வசனத்தைப் படிப்பதன் மூலமாக பெறக்கூடிய விசுவாசத் திலிருந்து (அப். 17:11, 12; ரோமர் 10:17) மாறுபடுகிறது. இது தேவனுடைய வசனத்தின் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட போதனை அமைப்பிலிருந்தும் மாறுபடுகிறது (கலா. 3:23; பிலி. 1:27; 1 தீமோ. 3:9; யூதா 3). இப்படிப்பட்ட விசுவாசத்தின் மூலமாக, இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமைகள் கிடைக்கும்படிக்கு ஆவியானவர் இந்த விசுவாசத்தை ஒரு வரமாக அருளினார் (1 கொரி. 12:11; 13:2).

"குணமாக்கும் வரங்கள்" மற்றும் "அற்புதங்களைச் செய்யும் சக்தி" (1 கொரி. 12:9, 10) என்பவையும் ஆவியானவருடைய வரங்களாயிருந்தன. இந்த வரங்களைப் பெற்றவர்கள், வியாதியஸ்தருக்கு ஊழியம் செய்வதில் மனிதத் திறமைக்கு அப்பால் செல்ல இது அவர்களுக்கு வல்லமை அளித்தது.

"தீர்க்கதரிசனம் உரைத்தல்" மற்றும் "ஆவிகளைப் பகுத்தறிதல்" என்பவை தேவனுடைய வசனத்துடன் தொடர்புடையவைகளாய் உள்ளன (1 கொரி. 12:10). கிறிஸ்தவத்திற்கு முந்திய காலகட்டத்தில் தேவன் தமது வசனத்தைப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் மூலமாக வெளிப் படுத்தினார் (2 பேது. 1:20, 21). புதிய உடன்படிக்கையின் காலத்தில்கூடத் தேவனுடைய வசனம் எல்லாருக்கும் தரப்படவில்லை. அவர் ஆவியானவர் மூலம் தமது வசனத்தை அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோருக்கு வெளிப்படுத்துதலுடன் மட்டுப்படுத்தினார். அவர்கள் எழுதியுள்ளவற்றைப் படிப்பதன்மூலம் மாத்திரமே மற்றவர்கள் தேவனு டைய வெளிப்படுத்துதலை அறிய முடியும் (எபே. 3:3-5).

ஆவிகளைப் பிரித்தறியும் வரம் பெற்றவர்களுக்கு, உண்மையான மற்றும் கள்ளப் போதகர்களை வித்தியாசப்படுத்தக் கூடியவர்களாய் இருக்கும்படிக்கு ஆவியானவரால் அந்த வரம் அருளப்பட்டது (1 கொரி. 12:10; 14:29).

பட்டியலின் கீழ்ப்பகுதியில், "பற்பல பாஷைகளைப் பேசுதல்" மற்றும் "பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்" என்பவை உள்ளன (1 கொரி. 12:10). இந்த வரங்களைப் பெற்றவர்கள் தாங்கள் படித்திராத மொழிகளைப் பேச முடிந்தது அல்லது தாங்கள் முன்பு அறிந்திராத அல்லது கற்றிராத மொழிகளில் விளக்கம் தர முடிந்தது.[9]

இந்த வரங்கள் ஆவியானவரையோ அல்லது இவற்றைப் பெற்றுக் கொண்டவர்களையோ மகிமைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்க வில்லை. ஆவியானவரைக் குறித்து இயேசு, "அவர் ... என்னை மகிமைப் படுத்துவார்" என்று கூறினார் (யோவா. 16:14). இயேசுவுக்குச் செலுத்து வதைக் காட்டிலும் அதிகமான மகிமையை ஒரு தனிநபருக்கோ அல்லது பரிசுத்த ஆவியானவருக்கோ செலுத்தும் எந்த போதனையும் அல்லது நடைமுறையும் பரிசுத்த ஆவியானவரின் நோக்கம் மற்றும் ஊழியம் ஆகிய வற்றிற்குப் பொருத்தமற்றதாக உள்ளது.

## *முடிவுரை*

*ஆவிக்குரிய வரங்கள், பக்குவமடையாத சபையானது பக்குவத்தில் வளரவும், விசுவாசத்தில் நிலைநாட்டப்படவும், பக்திவிருத்தியடையவும் அவைகளுக்கு அருளப்பட்டன. வரங்கள் அப்போஸ்தலர்களிடத்தில் ஒப்பு விக்கப்பட்டன. அவைகள் ஆவியானவரால் அவரது சித்தத்தின்படியே, அப்போஸ்தலர்களுடைய கரங்களின் மூலமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. பச்சிளம் குழந்தையின் நிலையில் இருந்த கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் பக்குவமடையும்படிக்கு அவர்களுக்கு வரங்கள் அருளப்பட்டன. பரிசுத்த ஆவியானவருக்கோ அல்லது இந்த வரங்களைப் பெற்றவர்களுக்கோ அல்ல, மாறாக, இயேசுவுக்கே மகிமை செலுத்தப்பட வேண்டியதாயிருந்தது.*

---

*குறிப்புகள்*

[1]F. W. Grosheide, *Commentary on the First Epistle to the Corinthians,* The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1953), 283. [2]Gordon D. Fee, *The First Epistle to the Corinthians,* The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 586. [3]Robert G. Bratcher, *A Translator's Guide to Paul's First Letter to the Corinthians* (New York: United Bible Societies, 1982), 124. [4]Frederick Dale Bruner, *A Theology of the Holy Spirit* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1970), 290. [5]Ibid. *[6]மேலும், பரிசுத்த ஆவியானவர் உள்ளாக வாசம்பண்ணுதல் என்பது அற்புத வரங்களில் இருந்து வித்தியாசப்பட்டதாக வைக்கப்பட வேண்டும். உள்ளாக வாசம்பண்ணும் ஆவியானவர் என்ற விஷயமானது குமாரத்துவத்தை உறுதிப்படுத்து வதற்காக எல்லாக் கிறிஸ்தவர்களாலும் பெற்றுக்கொள்ளப்படுவதாக இருக்கையில், அற்புத வரங்கள் என்பவை அப்போஸ்தலர்களின் கரங்கள் வைக்கப்படுதல் மூலமாக மாத்திரம் அருளப்பட்டன.* [7]Owen D. Olbricht, *Baptism*: *New Birth or Empty Ritual?* (Delight, Ark.: Gospel Light Publishing Co., 1994), 141-42. *[8]லூக். 1:77; 11:52; ரோமர் 2:20; 11:33; 15:14; 1 கொரி. 1:5; 13:2, 8; 14:6; 2 கொரி. 2:14; 4:6; 8:7. [9]பாஷைகளைப் பேசுதல் பற்றிய ஒரு கலந்துரையாடல் இந்தப் புத்தகத்தில் "பாஷையில் பேசுதலும் பரிசுத்த ஆவியானவரும்" என்ற இனிவரும் பாடத்தில் காணப்படுகிறது.*